# படைப்பின் ரகசியம்!



இந்தியாவின் எதிர்காலம்..?

இன்றைய இளைஞர்கள்!

வேறு எந்த நாட்டிலும் நம் தேசத்தில் உள்ளது போல், பாதி ஜனத்தொகைக்கு மேல் இளம் வயதினராக இல்லை. இவர்கள் முறையான கல்வி கற்று, சரியான பயிற்சிகள் பெற்று, சிதறாத கவனம் வைத்து, நிலையாக நிற்கப் பழகி விட்டால்... 20 வருடங்களில் இந்தியா பெரும் உயரங்களைத் தொடும்!

அதே சமயம், அடுத்த தலைமுறை ஒழுங்கான கல்வி பெறாமல், முழுமையான ஈடுபாடுகொள்ளாமல், தேவையான பயிற்சிகள் இல்லாமல், நிலையற்றுத் தடுமாறினால்... இந்தியா உலகின் மிக மோசமான பிச்சைக்கார நாடாகிவிடும்!

இளமை என்பது பதமாகிக்கொண்டு இருக்கும் பருவம். அற்புதமான வாய்ப்புகளின் நுழைவாயில். இளைய சமுதாயத்தை மாபெரும் சக்தி அலையாக்கப் போகிறோமா, அழிவு கொண்டுவரும் சுனாமியாக்கப் போகிறோமா? பொறுப்பு நம் கையில்!

பருத்தி பயிரிட வேண்டும் என்று நினைக்கிறீர்கள். கடவுளிடம் போய், 'பருத்தி தா' என்றால், எப்படிக் கொடுப்பார்? பருத்தி வளர்வதற்கு வளமான மண், தேவையான உரம்,



## நான் அறிந்த ரகசியம்...

வா, ஒன்றிடு
ஓங்கி அழைத்தது
விரிகடல்
குப்பையாய் மிதந்தேன்
கரையோரம் எறிந்தது
கட்டையாய் விழுந்தேன்
அலை தூக்கிச் சுமந்தது
இடதும் வலதுமாய்
மேலும் கீழுமாய்
நேரும் குறுக்குமாய்
நீந்திக் களைத்தேன்
நீள்கடலோ நிராகரித்தது.
நீரை ருசித்தேன்
நிஜம் புரிந்தது
உப்பு பொம்மையாய்
உருக்கொண்டேன்
களிப்புடன் குதித்தேன்
கடல் கொண்டது
கரைத்தது... கரைந்தேன்
கடலே ஆனேன்!

தண்ணீர், காற்று என எல்லாம் சரிவர அமைந்தால்தானே, நீங்கள் பயிரிட்ட செடியில் பருத்தி காய்க்கும்?

படைப்பின் ரகசியமே அதுதான்! எது எது எந்த விகிதத்தில் இருக்க வேண்டுமோ, அந்தக் குறிப்பிட்ட விகிதத்தில் அமைந்துவிட்டால், தானாகவே நேர வேண்டிய விளைவு நேரும். மாறான விகிதத்தில் அமைந்துவிட்டாலோ, எத்தனை போராடினாலும் எதிர்பார்ப்பது நிகழாது.

சங்கரன்பிள்ளையின் மனைவி அளவுக்கு அதிகமாக உடல் பெருத்து அவதிப்பட்டாள். அவளை டாக்டரிடம் அழைத்துப் போனார், சங்கரன்பிள்ளை. அவளைப் பரிசோதித்த டாக்டர், சங்கரன்பிள்ளையைத் தனியே அழைத்துப் போனார்.

"தினமும் உங்கள் மனைவிக்கு காலையில் அருகம்புல் சாறு கொடுங்கள். விடிகாலையிலேயே எழுப்பி, நான்கு கிலோ மீட்டராவது வாக் அழைத்துப் போங்கள். அவளிடம் கோபமாகப் பேசாமல், அன்பாக இருங்கள். ஒவ்வொரு வேளையும் நிறைய பச்சைக் காய்கறிகளை உங்கள் கையால் கொடுங்கள். பழங்கள் நறுக்கிக் கொடுங்கள். அவள் இளைக்க வேண்டுமானால், நீங்களும் கொஞ்சம் சோம்பலை உதற வேண்டும்!"

வீட்டுக்குப் போகும் வழியில் "டாக்டர் என்ன சொன்னார்?" என்று கேட்டாள் மனைவி.

"நீ இளைக்க வழியே இல்லையாம்" என்றார், சங்கரன்பிள்ளை.



## இன்னொரு கரண்டி பாயசம்!

"ரசித்துச் சாப்பிட்டாயே, இந்தா" என்று இன்னொரு கரண்டி பாயசத்தை கேட்காமலேயே இலையில் பரிமாறும் அம்மாவுக்கும் ஆனந்த விகடனுக்கும் வித்தியாசமில்லை.

'அத்தனைக்கும் ஆசைப்படு' தொடரைத் தொடர்ந்து சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்களிடம் நமக்காகவே சில ரகசியங்களைச் சேகரிக்கும் பணியும் எங்களுக்கே அன்புடன் வழங்கப்பட்டது.

காதல் பற்றிக் கேட்டோம், கருணைக் கொலையைப் பற்றிக் கேட்டோம், மாதர் பற்றிக் கேட்டோம், மரணம் பற்றிக் கேட்டோம், தேசம் பற்றிக் கேட்டோம், தலைவன் பற்றிக் கேட்டோம்...

உங்கள் மனதிலும், எங்கள் மனதிலும் ஓயாமல் தளும்பும் எத்தனையோ சந்தேகங்களை சத்குரு முன் வைத்தோம். எந்தக் கேள்வியும் அவர் புருவங்களை உயர்த்தியதில்லை; இதழ்களில் புன்னகையைத்தான் கொண்டுவந்தன.

தன் அழுத்தமான கருத்துக்களை, சரளமான வார்த்தைகளில் சொல்லி, ஆணியடித்தாற்போல் விளங்கவைப்பதில் சத்குரு வல்லவர்.



'அசைபோடுகிறேன்' பகுதியில் ஆனந்த விகடன் வாசகர்களுடன் அவர் தன் வாழ்க்கை பற்றி பிரத்யேகமாகப் பகிர்ந்துகொண்ட பல தகவல்கள், சத்குருவுடன் நெருக்கமாக இருப்பவர்கள்கூட அதற்கு முன் அறியாதவை.

சத்குருவோடு ஆங்கிலத்தில் உரையாடி, ரசித்து ருசித்து, அதைத் தமிழில் விகடன் வாசகர்களுடன் பல வாரம் தொடர்ந்து பகிர்ந்துகொள்ள வாய்ப்பு கிடைத்தது எங்கள் அதிர்ஷ்டம்!

விகடனுக்கு நன்றி. சத்குருவுக்கு நமஸ்காரங்கள்!

அன்புடன்,
சுபா

இளைஞர்களுக்கு ஆக்கபூர்வமான வழிகாட்டுதல் செய்யாமல், அவர்களைக் குறை மட்டும் சொல்வது, சங்கரன்பிள்ளை தன் மனைவிக்காகப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட அழகைப் போலத்தான்!

கல்வி, பயிற்சி என்பதெல்லாம் முக்கியமானாலும், அதிமுக்கியமானது நிலையாக நிற்கும் திறன்தான்.

உடல் அளவிலும் மனதளவிலும் நிலையற்று இருக்கும் இளைஞர்களிடமிருந்து ஒழுங்கான நோக்கமின்றி, சரியான இலக்கின்றிச் செலுத்தப்படும் சக்தி ஆக்கபூர்வமாக இருக்காது. அழிவுக்குதான் வழிகோலும்! இளைஞரை மட்டுமல்ல, சுற்றியுள்ளவர்களையும் சேர்த்தே அது சிதைக்கும்.

இளமை என்பது மிகச் சக்தி வாய்ந்த பருவம். சிறியவர்களுக்கும் அவ்வளவு

# அசைபோடுகிறேன்!

என்னை வெவ்வேறு நபர்கள் வெவ்வேறு உயரங்களில் நின்று பார்ப்பதால், அவர்களுக்கு நான் வெவ்வேறுவிதமாகத் தோற்றமளிக்கிறேன். ஆனால், அடிப்படையில் ஏதோ ஓர் அம்சம் அவர்களை ஒரேவிதமாக என்பால் ஈர்க்கிறது.

என்னிடம் வந்தீர்களா? உங்களிடம் உண்மைகளைத்தான் சொல்வேன். ஆனால், என் வார்த்தைகளை அப்படியே முழுமையாக நீங்கள் நம்பத் தேவையில்லை. உங்கள் அனுபவமே உங்களுக்கு உண்மை.

நான் அள்ளித் தரும் கையளவு தண்ணீர், நாக்கை நனைக்க உதவுமே தவிர, உங்கள் தாகத்தைத் தணிக்காது. நீங்களே குனிந்து, ஓடையிலிருந்து அள்ளி எடுத்து அருந்தினால்தான் நிறைவு கிடைக்கும்; உங்கள் தாகம் தணியும்.

முப்பது வருடங்களுக்கு முன்பு ஒரு நாள்... ஒரு குடிசைப் பகுதியில், பன்றிகளுடன் வித்தியாசமில்லாமல் சில குழந்தைகள் கழிவு நீரிலும், சாக்கடை நீரிலும் ஊறிக் கொண்டு இருந்ததைக் கவனித்தேன். திடுக்கிட்டேன்.

படிப்பறிவும், செல்வாக்கும் இல்லாத இவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று என் இளம் மனம் துடித்தது. தினம் அந்தக் குப்பத்தில் அரை மணி நேரம் செலவழித்தேன்.

வீட்டுக்கொரு தென்னங்கன்று கொடுத்தேன். கழிவு நீரை எப்படி தென்னை வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாம் என்று கற்றுத் தந்தேன். நண்பர்களைத் திரட்டினேன். வாரமொரு முறை ரப்பர் குழாய்களால் குடிசைக் குழந்தைகள் மீது விளையாட்டாகத் தண்ணீரைப் பீய்ச்சியடித்துச் சுத்தம் செய்தோம். கோழிப் பண்ணைகளிலிருந்து இலவச முட்டைகள் சேகரித்து குடிசை வாழ் குழந்தைகளுக்குக் கொடுத்தோம்.

மூன்று மாதங்களில் அங்கே ஆச்சர்யப்படத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன.

அந்த அனுபவமே பிற்பாடு ஈஷாவில் கிராமப் புத்துணர்வு இயக்கத்துக்கு விதை போட்டது.



அடிப்படைக் கல்வி, அவசியமான மருத்துவம், அவர்களே மறந்துபோன விளையாட்டு, மூலிகை விவசாயம் என எத்தனையோ கோணங்களில் ஈஷாவின் கிராமப் புத்துணர்வு இயக்கம் கிராம மக்களுடன் செயல்பட்டு வருகிறது. மூவாயிரத்துக்கும் மேலான கிராமங்கள் சோர்வு நீங்கி, மீண்டும் புத்துணர்ச்சியுடன் இயங்கத் துவங்கிவிட்டன.

இதற்காக உலகெங்கிலுமிருந்து பல லட்சம் பேர் பணத்தாலும், உடலாலும், பண்டங்களாலும் ஈஷாவுக்கு உதவி செய்து வருகிறார்கள்.

கனவுகள் முற்றிலும் சிதைந்துபோகக் கூடாதென்றால், கனவுகள், நிஜங்கள் இரண்டையும் ஏதோ ஒரு புள்ளியில் சந்திக்க வைத்தாக வேண்டும். இதுதான் ஈஷாவின் நோக்கம்.

சிறு வயதில் என் அம்மா அடிக்கடி சொல்வார்... "நீ மிக அதிர்ஷ்டமானவனாம். ஜோசியர் சொன்னார்!"

"நான் உழைத்து ஈட்டிய வெற்றிகளை என் ஜாதகத்துக்கு அர்ப்பணிக்கிறாயே" என்று வேடிக்கையாக அவரிடம் சொல்வேன்.

இப்போது மனம் திறந்து சொல்கிறேன். அவளுடைய வார்த்தைகள் உண்மையாகிவிட்டன. நான் பெரிய அதிர்ஷ்டக்காரன்தான்!

உலகெங்கும் நம்பிக்கை இழந்து வெறுத்துப்போன முகங்களுடன் அலையும் மனிதர்களுக்கு மத்தியில், என்னைச் சுற்றி இருக்கும் மனிதர்களின் கண்களில் நம்பிக்கையும் அன்பும் அமைதியும் கருணையும் ஆனந்தமும் ஒளிவிடுகின்றன.

அனுதினமும் அதைப் பார்க்கும்போது அடித்துச் சொல்லத் தோன்றுகிறது... நான் அதிர்ஷ்டக்காரன்தான்!

Love & Grace

சக்தி கிடையாது; முதியவர்களுக்கும் அவ்வளவு சக்தி கிடையாது.

உடலளவிலும் மனதளவிலும் மிகுந்த சக்தி அருளப்பட்டிருக்கும் இளைஞரில் பலர், அதை உணரும் கவனமின்றிச் சோர்ந்திருப்பதைக் கவனிக்கிறேன். உள்ளே நிலையற்று இருப்பதால் நேரும் விபத்து இது.

அதனால்தான், இன்றைய இளைஞர்கள் உள்ளுக்குள் தீர்மானமாக நிலைபெற வேண்டும் என்பதை முக்கியமாக நினைக்கிறேன்.

அதற்கு ஓர் எளிய வழி... தியானம்.

ஈஷாவுக்கு வருபவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள். இவர்களில் ஒவ்வொருவரும் தங்களைச் சுற்றியுள்ள பத்து பேரை யாவது ஆக்கபூர்வமாக மாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவர்களுக்கு அந்தத் துடிப்பும் ஆர்வமும் உள்ளது.

மீண்டும் சொல்கிறேன்... படித்துக்கொண்டு இருந்தாலும், வேலையில் இருந்தாலும், வேறு துறையில் ஈடுபட்டிருந்தாலும், ஒவ்வொரு இளைஞனும் தவறாது தியானம் செய்து வந்தால், அவன் சக்தி பெருகும். அளவிட முடியாத அந்த சக்தி ஆக்கபூர்வமான திசையில் செயல்படும். இது நீங்கள் பயன்படுத்த வேண்டிய ரகசியம்.

**ரகசியம் பல அறிந்தோம்!**